கிறது. அதை நம்முடைய செய்தித் துறை நடத்தி வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் யோசனையும் கவனத்தில் கொள்ளப்படும்.

திரு. மு. இரத்தினசபாபதி: துணைத் தலைவரவர்களே, டில்லியிலிருந்து நமது தமிழ்நாடு இல்லத்தில் தங்கியிருப்பவர்களுக்கு போக்குவரத்திற்காக கார் வசதி செய்யப்பட்டிருக்கிறதா? அப்படி இருந்தால் எந்த வகையில் வாடகை வசூலிக்கப்படுகிறது?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இப்போது அறை வாடகையைப் பற்றித்தான் கேள்வி. கார் வாடகையைப்பற்றி சொல்லவில்லை.

திரு. ஏ. எம். இராஜா: புதிதாகக் கட்டப்படும் இல்லத்தில் எத்தனை அறைகள் இருக்கும்? அந்த அறைகளில் ஏர் கண்டிஷன் வசதி செய்யப்படுமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இப்போதே தமிழ்நாடு இல்லத்தில் உள்ள சில அறைகள் ஏர் கண்டிஷன் செய்யப்பட்டிருக்கின்றன. புதிதாகக் கட்டப்படும் கட்டடத்திலுள்ள அறைகள் எல்லாம் ஏர் கண்டிஷன் செய்யப்பட வேண்டும் என்று திட்டம் இருக்கிறது.

### *Uniform gratuity for workers*

* 403. *Q.*—Thiru N. DENNIS: Will the Hon. the Minister for Labour be pleased to state—

(*a*) whether there are proposals under the consideration of the Government to press the Union Government to prescribe uniform gratuity to workers in all industrial concerns; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: (அ) இல்லை.

(இ) இவ்வினா எழவில்லை.

திரு. என். டென்னிஸ்: துணைத் தலைவரவர்களே, எல்லாத் தொழில் நிறுவனங்களிலும் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கும் ஒரே சீரான பணிக்கொடை அளித்தால் அந்தத் தொழிலாளர்களுக்கு மகிழ்ச்சி ஏற்பட்டு, தொழிலில் ஊக்கம் காட்டுவார்கள். ஆகவே, அதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: ஏற்கெனவே இந்த அரசு, தொழிலாளர் நல அமைச்சர்கள் மாநாட்டில் இதுபற்றித் தனது கருத்தைத் தெரி

1973 மார்ச் 17]

வித்து, தொழிலாளர்களுக்கு ஒரு மாதச சம்பளம் கிராஜுவிடி தரவேண்டும் என்று வற்புறுத்தியது. ஆனால் மத்திய அரசு ஆண்டு ஒன்றுக்கு 15 நாட்கள் ஊதியத்தைத்தான் பணிக்கொடையாக தரவேண்டுமென்று முடிவு செய்திருக்கிறது. எனவே, அதற்கான விதிமுறைகளை இந்த அரசு விரைவில் செயல் படுத்தும்.

**திரு. டே. சி. தூயமணி:** ஈக்குவல் ஒர்க், ஈக்குவல் வேஜ் என்று அரசியல் சட்டம் 4-வது பிரிவில் சொல்லப்பட்டிருக்கிறது. அதை நிறைவேற்றும் வகையில் சட்டம் கொண்டு வரவேண்டுமென்று மாநில அரசு மத்திய அரசை வற்புறுத்துமா?

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன்:** மாநில அரசின் சார்பில் நான் டில்லியில் நடைபெற்ற தொழிலாளர் நலத்துறை அமைச்சர்கள் மாநாட்டில் ஆண்டுக்கு ஒரு மாதம் பணிக்கொடை தரவேண்டுமென்று வலியுறுத்தினேன். என்றாலும் மத்திய அரசு 15 நாள் ஊதியம்தான் தரவேண்டுமென்று முடிவு செய்திருக்கிறது.

### பர்மா, இலங்கையிலிருந்து திரும்புவோருக்குக் கடன்கள்

*404. **வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன்:** மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பர்மா, இலங்கை போன்ற நாடுகளில் இருந்து வரும் அகதிகளுக்கு விவசாயம், வர்த்தகம் போன்ற தொழில் செய்ய குடும்பம் ஒன்றுக்கு எவ்வளவு ரூபாய் தற்போது கடன் வழங்கப்படுகிறது?

**மாண்புமிகு திருமதி. சத்தியவாணிமுத்து:** விவர அறிக்கை @ ஒன்று சட்டப்பேரவையில் வைக்கப்பட்டுள்ளது.

**திரு. கே. எ. வகாப்:** இந்த பர்மா, இலங்கை அகதிகளுக்கு அளிக்கப் படுகிற உதவித் தொகை போதவில்லை என்று அவர்களே சொல்கிறார்கள்—என் தொகுதியில்தான் அந்தப் பிரச்சினை இருக்கிறது— இந்த உதவித் தொகையை அதிகப்படுத்துவார்களா? இப்போது ஒரு வீடு கட்ட 2 ஆயிரம் தான் தருகிறார்கள். அதற்குள் கட்ட முடியவில்லை. ஆகவே இந்தப் பண உதவியை அதிகப்படுத்துவார்களா? மேலும் வந்துகொண்டிருக்கிற அகதிகளுக்கும் இந்த உதவியை அளிப்பார்களா?

**மாண்புமிகு திருமதி. சத்தியவாணிமுத்து:** இந்த அகதிகளுக்கு எந்த எந்த காரியத்திற்கு என்ன என்ன உதவி அளிப்பது என்பது மத்திய அரசாங்கத்தால் நிர்ணயிக்கப்படுகிறது. அந்த அடிப்படையில்தான் மாநில அரசாங்கம்

@ 114-119-ம் பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது.